පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 10

**இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019**

முயற்சியாண்மைக்கல்வி

63 | T | I/II

பாடசாலையின் பெயர் : ....................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................
..........................................................................................

நேரம் : 3 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்:**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இல. 01 – 36 வரையிலான வினாக்களுக்கு (1), (2), (3), (4) என்ற விடைகளில் சரியான விடையைத் தெரிவு செய்க.**
- **37 – 40 வரையிலான வினாக்களுக்கு உமது விடைத்தாளில் விடை எழுதுக.**
- **உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் விடைத்தாளின் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தினை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை ⊗ இடுக.**

---

## பகுதி – I

1) எண்ணங்களை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடல், சரியான தீர்மானம் எடுத்தல் என்பவற்றினூடாகப் பொருளாதார சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் தனிநபர்,
   i) சிறந்த திட்டமிடுனர்
   ii) சிறந்த வணிகர்
   iii) முயற்சியாளர்
   iv) சிறந்த முகாமையாளர்

2) உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உடல் அல்லது உள ரீதியான சக்தி,
   i) வணிகம் எனப்படும்
   ii) உழைப்பு எனப்படும்
   iii) மூலதனம் எனப்படும்
   iv) முயற்சியாண்மை எனப்படும்

3) பாடசாலைக் கல்வியைப் பெறும் குறைந்த வருமானமுடைய பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்கும் ஒரு நடவடிக்கையானது முயற்சியாண்மையின்,
   i) இலாபம் ஒன்றினை உழைக்கும் நடவடிக்கையாகும்
   ii) மனித வளத்தை மேம்படுத்தும் நடவடிக்கையாகும்
   iii) தனிநபர் ஒருவரின் தலைவிதியை தீர்மானிக்கும் நடவடிக்கையாகும்
   iv) சமூக நலனின் பொருட்டு பங்களிப்புச் செய்யும் நடவடிக்கைகளில் ஒன்றாகும்

4) உற்பத்திக்கு தேவைப்படுகின்ற மனிதனால் உருவாக்கப்பட்ட சகல வளங்களும் ................................ எனப்படும்.
   i) பொருட்கள்
   ii) சேவைகள்
   iii) மூலதனம்
   iv) முயற்சி

Education NCP- www.edncp.lk

5) ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வு மாத்திரமே உள்ளது என எண்ணுதல்,
   i) புத்துருவாக்கத்தை மேம்படுத்தக்கூடிய காரணிகளில் ஒன்றாகும்
   ii) ஆக்கத்திறனை மேம்படுத்தும் காரணியாகும்
   iii) ஆக்கத்திறனுக்கு தடையாக அமையும் காரணியொன்றாகும்
   iv) எதிர்கால தூரநோக்குக்குத் தடையாக அமையும் காரணியாகும்

6) LED மின் குமிழைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வெசாக் பந்தல், புத்துருவாக்கம் இடம் பெறுகின்ற முறைகளில் எவ்வகையினைச் சாரும்?
   i) புதிய கண்டுபிடிப்பு
   ii) கூட்டு
   iii) நீடிப்பு
   iv) பின்பற்றுதல்

7) வணிகம் ஒன்றின் அகச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் தொகுதி,
   i) உரிமையாளர், மக்கள், சூழல், ஊழியர்
   ii) வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள், உரிமையாளர்கள்
   iii) உரிமையாளர், வாடிக்கையாளர், ஊழியர்
   iv) உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள்

8) வணிகத்துக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்தல் என்பது முயற்சியாளர் வகிபங்கில் எவ்வகையினைச் சாரும்?
   i) உரிமையாளரின் வகிபங்கு
   ii) முகாமையாளரின் வகிபங்கு
   iii) தலைவரின் வகிபங்கு
   iv) மேற்கூறிய எதுவுமன்று

9) புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கிய காரணம்,
   i) இலாபம்
   ii) குடும்பம்
   iii) கல்வி
   iv) ஆர்வம்

10) தமது சூழல் தொடர்பில் முயற்சியாளர் எப்போதும்,
   i) கண்டும் காணாமல் இருப்பர்
   ii) அவதானமாகவே இருப்பர்
   iii) அவதானமாக இருக்கமாட்டார்கள்
   iv) சூழல் மாற்றங்களை இனங்காணமாட்டார்கள்

11) பின்வருவனவற்றுள் விருப்பமாக அமைவது,
   i) கல்வி
   ii) போக்குவரத்து
   iii) சுகாதாரம்
   iv) மாடிவீடு

12) மனிதர்கள் தமது வாழ்க்கையினை நடாத்திச் செல்வதற்கு கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டிய விடயங்கள்,
   i) பண்டங்கள்
   ii) தேவைகள்
   iii) சேவைகள்
   iv) விருப்பங்கள்

13) சமூக முயற்சியாண்மையாளர்கள் உருவாகுவதற்கு பிரதான காரணமாக அமையக் கூடியது,
   i) போர்ச்சூழல் காணப்படுதல்
   ii) சூழல் மாசடைதல்
   iii) சமூகத்தில் நோய்கள் பரவுதல்
   iv) தர்மசிந்தை காணப்படல்

Education NCP - www.edncp.lk

14) பிரதேச மட்டத்தில் முயற்சியாண்மைக்கு பொருத்தமான உதாரணமாக **அமையாதது,**
   i) அம்பலாங்கொடையில் முகமூடி உற்பத்தி
   ii) குருநாகலில் காய்கறி உற்பத்தி
   iii) யாழ்ப்பாணத்தில் பனை உற்பத்தி
   iv) மல்வானையில் ரம்புட்டான் உற்பத்தி

15) வணிகச் செயற்பாடுகளில் இயற்கையாகவும், பாரம்பரிய முறையிலும் ஈடுபடுபவர்கள்,
   i) வணிகர்கள்
   ii) முயற்சியாளர்கள்
   iii) சமூக முயற்சியாளர்கள்
   iv) உள்ளக முயற்சியாளர்கள்

16) இதுவரை இல்லாத ஒன்றை உருவாக்க அதனை வாடிக்கையாளருடைய தேவையாக்கி விடுவது,
   i) உற்பத்தி நடவடிக்கையாகும்
   ii) சிறந்த தலைமைத்துவமாகும்
   iii) புத்தாக்கமாகும்
   iv) முகாமைத்துவ திறனாகும்

17) முயற்சியாண்மையின் நோக்கம் என்பது,
   i) வணிகம் ஒன்றை நடாத்துதல் ஆகும்.
   ii) தனக்கும், சமூகத்திற்கும் நல்லதைச் செய்வதாகும்.
   iii) தனிப்பட்ட இலாபங்களை உழைத்தலாகும்.
   iv) சூழலைப் பாதுகாத்தலாகும்.

18) வெற்றி பெற்ற முயற்சியாண்மையாளர்களின் பண்பொன்றாகக் கருத **முடியாதது,**
   i) மற்றவர்களுக்கு உதவுகின்றார்கள்
   ii) சமூகத்தில் ஆடம்பரமாகவும், சௌகரியமாகவும் வாழ்கின்றனர்
   iii) அரசியலில் தலைமை வகிக்கின்றனர்
   iv) சமூகத்தில் மதிப்பற்ற நிலையில் வாழ்கின்றனர்

19) வணிகத் தீர்மானங்களை எடுப்பதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் வகிப்பது,
   i) ஒரு தலைவர் வகிபாகத்தையாகும்
   ii) பொது முகாமையாளர் வகிபாகத்தையாகும்
   iii) உடைமையாளர் வகிபாகத்தையாகும்
   iv) ஒரு தயாரிப்பாளர் வகிபாகத்தையாகும்

20) சிற்றளவு வணிகம் தொடர்பில் கூறக்கூடிய சரியான கூற்று,
   i) எமது நாட்டில் ஒரு சில குழுக்களால் மட்டும் மேற்கொள்ளப்படும் வணிக வகை
   ii) எமது நாட்டில் சிற்றளவாக மேற்கொள்ளப்படும் வணிக வகை
   iii) எமது நாட்டில் பரந்தளவில் மேற்கொள்ளப்படும் வணிக வகை
   iv) எமது நாட்டில் பரம்பரையாக மேற்கொள்ளப்படும் வணிக வகை

21) சில்லறை வியாபாரி, எத்தகைய முயற்சியாளர் பிரிவினுள்ளடங்குவர்,
   i) சமூக முயற்சியாளர்
   ii) வணிகர்களான முயற்சியாளர்
   iii) நிறுவன முயற்சியாளர்
   iv) மேற்கூறிய எதுவுமன்று

Education NCP - www.edncp.lk

22) SWOT பகுப்பாய்வு (SWOT Analysis) எனப்படுவது,

i) வணிகத்தின் பலம், பலவீனம், வாய்ப்பு, சவால் பற்றிய பகுப்பாய்வு.
ii) வணிகத்தின் பலம், வாய்ப்பு, பற்றிய பகுப்பாய்வு.
iii) வணிகத்தின் பலம், பலவீனம் பற்றிய பகுப்பாய்வு.
iv) வணிகத்தின் வாய்ப்பு, சவால் பற்றிய பகுப்பாய்வு.

23) முயற்சியாண்மையின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கின்ற நன்மைகள்,

i) கவர்ச்சிகரமான இலாபத்தினை உழைத்தல்
ii) பயன்படுத்தாத இலாபத்தினை உழைத்தல்
iii) தன்னிறைவு நிலை
iv) நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி அதிகரித்தல்

24) நட்ட இடரிற்கும், இலாபத்திற்கும் இடையிலான தொடர்பாக அமைவது,

i) கூட்டுத் தொடர்பு
ii) எதிரத்தொடர்பு
iii) நேர்த்தொடர்பு
iv) மேற்கூறிய எதுவுமன்று

25) வாய்மொழி மூலமான தொடர்பாடலுக்கு உதாரணமாகக் கூறக்கூடியது,

i) கடிதம்
ii) தொலைபேசி
iii) மின்மணி
iv) மின்னஞ்சல்

26) வணிகங்களின் சமூகப்பொறுப்பாக கூற **முடியாதவை,**

i) அரச வரிகளை முறையாக செலுத்துதல்
ii) சூழல் மாசடையாமல் பேணுதல்
iii) உழைப்பினைச் சுரண்டாமை
iv) கலப்படம் மூலம் இலாபமீட்டல்

27) குறித்த தேவையை பூர்த்தி செய்யக்கூடிய பொருள் அல்லது சேவை மீதான ஆசை,

i) விருப்பமாகும்
ii) சிறு வணிக கருமமாகும்.
iii) சிறந்த உற்பத்தியாகும்
iv) தேவையாகும்

28) முயற்சியாளருக்கும், வணிகருக்குமிடையிலான ஒற்றுமையாக கருத முடியாத காரணி,

i) பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடல்
ii) வணிகத்தை விரிவுபடுத்துவதில் அக்கறை காட்டாமை
iii) கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல்
iv) நட்ட இடருக்கு முகங்கொடுத்தல்

29) தேக ஆரோக்கிய மத்திய நிலையம் அழகு சாதன உற்பத்தி தொடர்பான ஈடுபாடு என்பன புத்துருவாக்கத்திற்கு அடிப்படையாக அமையும் மூலாதாரங்களுள் எவ்வகையினைச் சாரும்?

i) மக்கள் சூழலிலும், வாழ்க்கையிலும் ஏற்படும் மாற்றங்கள்
ii) சந்தையில் ஏற்படும் மாற்றங்கள்
iii) மனப்பாங்கு எனப்படும் விளங்குமுறை நபர்களிடையே வேறுபடுதல்
iv) எதிர்பாராத நிகழ்வுகள்

30) முயற்சியாளர் ஏற்கும் ‘முகாமையாளர்’ வகிபாகத்தின் ஒரு பணியாக கருதப்படுவது,

i) பயன்களை அனுபவித்தல்
ii) ஆபத்துக்களை எதிர்கொள்ளல்
iii) வளங்களை வழங்குதல்
iv) திட்டமிடுதல்

Education NCP - www.edncp.lk

31) சூழல் மாற்றத்திற்கேற்ப இயைபாக்கமடையும் திறன் ……………………………….. என அழைக்கப்படும்.

i) சுதந்திரத்தன்மை
ii) நேர்சிந்தனை
iii) நெகிழும் தன்மை
iv) ஆக்கத்திறன்

32) பின்வருவனவற்றுள் 'நிலம்' என்ற உற்பபத்திக் காரணிக்குள் உள்ளடங்கும் தொகுதி,

i) கட்டடம், இந்திர உபகரணங்கள், கருவிகள்
ii) காணி, காடு, மண், கனிய வளம்
iii) ஆசிரியரின் உழைப்பு, தச்சனின் உழைப்பு, வைத்தியரின் உழைப்பு
iv) வணிகர், ஆசிரியர், முகாமையாளர், உற்பத்தியாளர்

33) தொடர்பாடற்திறனில் ஒன்றாகக் குறிப்பிட **முடியாதது** எது?

i) புதிய உற்பத்திகளை உற்பத்தி செய்தல்
ii) கூட்டம் நடத்துதல்
iii) தகவல்களை பரிமாறுதல்
iv) அறிக்கைகளை பகிர்ந்தளித்தல்

34) தர விருதினைப் பெற்ற பாடசாலை அதிபர் என்பவர் எவ்வகை முயற்சியாளர் ஆவார்?

i) பொருளாதார முயற்சியாளர்
ii) சமூக முயற்சியாளர்
iii) உள்ளக முயற்சியாளர்
iv) வணிகர்களான முயற்சியாளர்

35) முயற்சியாண்மையின் மூலம் முயற்சியாளருக்கு கிடைக்கின்ற நன்மை **அல்லாதது,**

i) தன்னிறைவு நிலை
ii) பணிகளில் ஒற்றுமை உருவாகுதல்
iii) ஆத்ம திருப்தி
iv) கவர்ச்சிகரமான இலாபத்தினை உழைத்தல்

36) பின்வருவனவற்றுள் வணிகச் சூழலின் இரு பகுதிகளாவன:

i) அகச்சூழல், அண்மியச் சூழல்
ii) அகச்சூழல், பூகோளச்சூழல்
iii) புறச்சூழல், வளங்கள்
iv) அகச்சூழல், புறச்சூழல்

Education NCP - www.edncp.lk

**37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு அடைப்பினுள் உள்ளவற்றுள் பொருத்தமான சொல்லினை வைத்து இடைவெளி நிரப்புக.**

(ஜெஸீகா கொக், விருப்பம், புதிய கண்டுபிடிப்பு, C.W.W கன்னங்கரா, தோமஸ் அல்வா எடிசன், தேவை)

37) தேவை உருவான பின்னர் இரண்டாவதாக உருவாவது ................................... ஆகும்.

38) தேசிய ரீதியில் பிரசித்தி பெற்றுள்ள பல சமூக முயற்சியாளர்களுள் ........................................... இவரும் ஒருவராவார்.

39) ‘நான் இரு கைகளையும் இழந்த நிலையிலேயே இவ் உலகின் வெளிச்சத்தைப் பார்த்தேன்’ இக்கூற்றுடன் தொடர்புடையவர் ........................................ ஆவார்.

40) முன்னர் காணப்படாத புதிய பொருள் அல்லது சேவை ஒன்று அல்லது செயற்பாடு ஒன்று உருவாதல் ....................................... எனப்படும்.

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி –II

**முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(1) **பின்வரும் சம்பவத்தைக் கவனமாக வாசித்து (i) தொடக்கம் (x) வினாக்களுக்கு விடை தருக.**

வணிகத் துறையில் பட்டப்படிப்பை முடித்த இல்ஹாம் ஏதேனும் முயற்சியொன்றை ஸ்தாபிக்க எண்ணினான். இதற்காக வியாபாரத்தில் அனுபவம் பெற்ற தனது மாமாவிடம் ஆலோசனை பெற விரும்பினான். இல்ஹாம் தனது மாமாவிடம் பின்வரும் வினாக்களை வினவினான். இவ்வினாக்களுக்கு மாமா எவ்வாறான பதில்களைக் கூறியிருப்பார் என்பதை நீர் குறிப்பிடுக.

i) முயற்சியாண்மை என்பது என்ன?

ii) முயற்சியாண்மையின் பண்புகள் இரண்டினை தருக.

iii) பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்யத் தேவைப்படும் காரணிகளுள் ஒன்றான மூலதனத்துக்கு உதாரணம் தருக?

iv) முயற்சியாண்மையின் பண்புகளில் ஆக்கத்திறனும் ஒன்றாகும். ஆக்கத்திறனுக்கு தடையாக அமையும் காரணிகள் இரண்டினை தருக.

v) சில முயற்சியாண்மைகள் பல முறை முயற்சித்த பின்னரே வெற்றியடைந்துள்ளன. அவ்வெற்றியின் பின்னால் பரீட்சித்துப் பார்த்துலினூடாக ஏற்பட்ட தவறுகள், தோல்விகள் அவற்றுக்குக் கூறப்பட்ட விமர்சனங்களும் கூடுதலாக உள்ளன. முயற்சியாளர்களின் தோல்வியானது அனுபவமாகக் கொள்ளப்படும். இக்கருத்துக்களுடன் தொடர்புடைய கண்டுபிடிப்பாளர் யார்?

vi) முயற்சியாளர் புத்துருவாக்கத்தில் ஈடுபடும் போது நட்ட இடர்கள் காணப்படலாம். வணிகத்தில் இடப்படும் பணத்திற்குரிய பிரதிபலன் கிடைக்காமல் போகலாம். இவ்வாறான நட்ட இடருக்கு பிரதான காரணம் யாது?

vii) முயற்சியாளர் என்பவரை எவ்வாறு அறிமுகப்படுத்தலாம்?

viii) வணிகம் என்றால் என்ன?

ix) முயற்சியாளருக்கும், வணிகரிற்கும் இடையிலான ஒற்றுமைகள் இரண்டினை தருக.

x) முயற்சியாளரின் பிரதான மூன்று வகைகள் யாவை?

(10 x 2 = 20 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

(2) 1) உற்பத்தி காரணங்களை குறிப்பிட்டு, அதில் "முயற்சியாண்மை" என்ற உற்பத்திக் காரணியின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக (3 புள்ளிகள்)

2) முயற்சியாளர்களிடம் "பொதுவாகக் காணப்படுகின்ற பண்புகள்" ஆறினையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3) "புத்துருவாக்கம்" என்பதால் கருதப்படுவது யாது? (2 புள்ளிகள்)

4) புத்துருவாக்கம் இடம்பெறுகின்ற முறைகள் நான்கினையும் தருக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

(3) 1)ஆக்கபூர்வமான தன்மை - புத்துருவாக்கம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்பினை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2) புத்துருவாக்கத்திற்கு அடிப்படையாக அமையும் மூலாதாரங்கள் ஆறினையும் தருக. (3 புள்ளிகள்)

3) 'நட்ட இடர்' என்பதனால் கருதப்படுவது யாது? (2 புள்ளிகள்)

4) தனியாட்களுக்கு தமது ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ள உதவியாக அமையும் இரண்டு விடயங்களும் எவை? (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

(4) 1) 'தேவைகள்' என்ற பதத்தினை வரையறுக்க. (2 புள்ளிகள்)

2) தேவைகளுக்கும், விருப்பங்களுக்குமிடையிலான வேறுபாடுகளை பட்டியற்படுத்துக. (3 புள்ளிகள்)

3) வணிகங்களின் பண்புகளை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

4) முயற்சியாளருக்கும், வணிகருக்கும் இடையிலான வேறுபாட்டினை சுருக்கமாக குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

(5) 1) முயற்சியாண்மையில் ஈடுபடுவதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் 'சமூகரீதியாக' அடைந்து கொள்ளும் நன்மைகள் மூன்றினைத் தருக. (3 புள்ளிகள்)

2) முயற்சியாளர் ஏற்கும் பாத்திரங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) "முயற்சியாளரானவர் சமூக நலன் பொருட்டு பங்களிப்புச் செய்கின்றார்" இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? காரணம் தருக. (3 புள்ளிகள்)

4) முயற்சயாண்மையின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கின்ற நன்மைகள் நான்கினை தருக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

(6) 1) 'சிற்றளவு வணிகம்' என்பதனால் கருதப்படுவது யாது? (2 புள்ளிகள்)

2) வணிகத்தினை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை எவை? (2 புள்ளிகள்)

3) சிற்றளவு வணிகத்தின் பண்புகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

4) சிற்றளவு வணிகத்திற்கும், முயற்சியாண்மைக்கும் இடையிலான தொடர்பினை சுருக்கமாகத் தருக. (3 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

(7) 1) 'சந்தை இடைவெளி' என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (2 புள்ளிகள்)

2) பொருளாதார விருத்தியில் சிற்றளவு வணிகங்களின் பங்களிப்புகள் மூன்றினைத் தருக? (2 புள்ளிகள்)

3) 'பல்வேறு சிற்றளவு வணிகங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவை சிறிது காலத்தில் தோல்வியைத் தழுவுகின்றன' இக்கூற்றினை நீர் ஆதரிப்பதற்கான காரணங்கள் மூன்றினைத் தருக? (3 புள்ளிகள்)

4) முயற்சியாளர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் திறன்கள் ஆறினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

முயற்சியாண்மைக்கல்வி - 10

## பகுதி – I

### விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 10) | 2 | 19) | 1 | 28) | 2 |
| 2) | 2 | 11) | 4 | 20) | 3 | 29) | 3 |
| 3) | 4 | 12) | 2 | 21) | 2 | 30) | 4 |
| 4) | 3 | 13) | 4 | 22) | 1 | 31) | 3 |
| 5) | 3 | 14) | 2 | 23) | 4 | 32) | 2 |
| 6) | 2 | 15) | 1 | 24) | 3 | 33) | 1 |
| 7) | 4 | 16) | 3 | 25) | 2 | 34) | 3 |
| 8) | 1 | 17) | 2 | 26) | 4 | 35) | 2 |
| 9) | 4 | 18) | 4 | 27) | 1 | 36) | 4 |

37) விருப்பம்

38) C.W.W. கன்னங்கர

39) ஜெஸீக்கா கொக்

40) புதிய கண்டுபிடிப்பு

## பகுதி – II

### விடைகள்

(1)

i. 'எதிர்காலத்தை மாற்றத் தூண்டப்படுகின்ற மனிதனின் மனோநிலை' (இது போன்ற பொருத்தமான வரைவிலக்கணத்திற்கு புள்ளி வழங்குக)

ii. ஆக்கத்திறன்
புத்துருவாக்கம்
நட்ட இடர்களை பொறுப்பேற்றல்
நேர் சிந்தனை
(இது போன்ற ஏனைய பண்புகளுக்கு புள்ளி வழங்குக)

iii. மூலதனம்
உ+ம்: கட்டடம்
இயந்திர உபகரணங்கள்
கருவிகள்

iv. உடனடி பெறுபேற்றை எதிர்பார்த்தல்
ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வே உள்ளது என எண்ணுதல்
தவறுகள், விமர்சனங்கள் தொடர்பில் காணப்படும் பீதி
நம்பிக்கைகள், மனப்பாங்குகள் தொடர்பில் உறுதியான நம்பிக்கை வைத்தல்
(இவை போன்ற பொருத்தமானவை)

v. தோமஸ் அல்வா எடிசன்

vi. நிச்சயமற்ற தன்மை

vii. எண்ணங்களை நடைமுறைப்படுத்துவதற்காகத் திட்டமிடல், சரியான தீர்மானம் எடுத்தல் என்பவற்றினூடாக பொருளாதார, சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் தனிநபர் (இது போன்ற பொருத்தமான விடைகள்)

viii. மனிதத் தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்வதற்குப் பண்டங்கள், சேவைகளை உற்பத்தி செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடு

ix. பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடல்
நட்ட இடருக்கு முகங்கொடுத்தல்
கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல்
வளங்களைப் பயன்படுத்தல்

x. வணிகர்களான முயற்சியாளர்கள்
சமூக முயற்சியாளர்கள்
உள்ளக முயற்சியாளர்கள்

(2)

i. நிலம் , உழைப்பு, மூலதனம் , முயற்சியாண்மை
முயற்சியாண்மை - நிலம் , உழைப்பு, மூலதனம் போன்ற காரணிகளைத் தேவையானவாறு ஒன்றிணைத்து பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கு முயற்சியாண்மை முக்கியமானதாகும்.

ii. அர்ப்பணிப்பு
பொதுவான அறிவு
சுய ஊக்குவிப்பு
தன்னம்பிக்கை
தகவல்களைத் தேடிப்பார்த்தல்
பாரிய ஆசை

iii. புதிய பொருள் அல்லது சேவைகளை உருவாக்கக்கூடிய திறன் புத்துருவாக்கம் எனப்படும்.

iv. கண்டுபிடிப்பு
பின்பற்றுதல்
நீடிப்பு
கூட்டு

(3)

i. புத்துருவாக்கத்தின் ஆரம்பம் ஆக்கப்பூர்வமான எண்ணமாகும். ஆக்கப்பூர்வமான எண்ணத்தினைப் பயனுள்ள ஒன்றாக மாற்றுவது புத்துருவாக்கத்தின் மூலமாகும்.

ii. எதிர்பாராத நிகழ்வுகள்
செயலொழுங்கின் தேவைப்பாடு
சந்தையில் ஏற்படும் மாற்றங்கள்
மக்கள் சூழலிலும் வாழ்க்கையிலும் ஏற்படும் மாற்றங்கள்
மனப்பாங்கு எனப்படும் விளங்கும் முறை நபர்களுக்கு நபர் வேறுபடல்
அறிவை மையமாகக் கொண்ட எண்ணக்கரு

iii. புதிய உற்பத்தியானதுநற்தையில் தனக்கான இடத்தைப் பிடிப்பதில் வெற்றியடைவதற்கு அல்லது தோல்வியடைவதற்குள்ள சந்தர்ப்பம் அல்லது நிகழ்வு

iv. கல்வி பயிற்சி

(4)

i. மனிதர்கள் தமது வாழ்கையினை நடாத்திச் செல்வதற்குக் கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டிய விடயங்கள் தேவைகள் எனப்படும்.

ii.

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| ஆரம்பத்திலேயே உருவாகும். | இரண்டாவதாக உருவாகும். |
| வரையறுக்கப்பட்டது. | பல விருப்பங்கள் காணப்படும், வரையறையற்றது. |
| சகலருக்கும் பொதுவானது. | ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட நிலைமைக்கேற்ப விருப்பங்கள் வேறுபடும். |
| பிறப்பிலேயே உருவாகும் | தனியாட்களுக்குத் தேவையானவாறு முயற்சியாளர்கள் அல்லது வணிகர்கள் உருவாக்க முடியும். |

iii. வளப் பரிமாற்றம் இடம் பெறல்
   கொடுக்கல் வாங்கல்கள் தொர்ச்சியாக இடம் பெறல்
   நோக்கமொன்று காணப்படல்
   நட்ட அச்சம் காணப்படல்
   விலையின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறல்
   பொருளாதார நடவடிக்கையொன்றாக அமைதல்

iv. சகல வணிகர்களும் முயற்சியாளர்களாவதில்லை, அதேபோன்று சகல முயற்சியாளர்களும் வணிகர்களாவதில்லை.

(5)

i. சமூக ரீதியாக ஏற்படுகின்ற அங்கிகாரம்
   தலைமைத்துவம் கிடைக்கின்றமை
   புகழும் பாராட்டுக்களும் கிடைக்கின்றமை

ii. தலைவர்
   உரிமையாளர்
   முகாமையாளர்

iii. ஆம்,
   தொழில்களைப் பெற்றுக் கொடுத்தல்
   அரசாங்கத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு உதவுதல்
   வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல்
   குறைந்த வருமானம் பெறும் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல்
   கட்டிடங்களை நிர்மானித்துக் கொடுப்பதும் உபகரணங்களை வழங்குவதும்

iv. தேசிய வளங்கள் பயன்படுத்தப்படல்
   பிரதேச அபிவிருத்தி ஏற்படல்
   புதிய பொருட்கள், சேவைகள் சந்தையில் அறிமுகப்படுத்தப்படல்
   தொழில்வாய்ப்புக்கள் உருவாதல்
   நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரித்தல்
   வெளிநாட்டுச் செலாவணியை உழைக்க முடியுமாதல்
   வருமான எற்றத்தாழ்வு குறைவடைதல்

(6)

i. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அளவு ஊழியர்களையும் குறைந்த முதலீட்டையும் உடைய தனியுரிமையின் கீழ் சுதந்திரமாக வழிநடாத்தப்படும் வணிகம் சிற்றளவு வணிகம் எனப்படும்.

ii. வணிகக் சிற்றளவு வணிகம்
நடுத்தர அளவு வணிகம்
பாரிய அளவு வணிகம்

iii. சிறிய தொகை மூலதனமாக இடப்பட்டிருத்தல்
ஊழியர் தொகை குறைவாக இருத்தல்
வணிகம் தனி ஒருவருக்கு உரிமையாக இருத்தல்
தீர்மானம் எடுப்பதில் இலகு நிலை காணப்படல்
வணிகச்செயற்பாடுகள் சிறிய பிரதேசத்திற்குள் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருத்தல்

iv. சந்தை பெரும்பாலான வெற்றிகரமான முயற்சியாளர்களின் ஆரம்பம் சிற்றளவு வணிகத்தின் மூலமே இடம் பெற்றுள்ளது.
பல்வேறு புத்தாக்கத்திற்கு சிற்றளவு வணிகங்களே துணை புரிந்துள்ளன.
முயற்சியாளர்களின் திறன்கள், ஆற்றல்களை பிரயோக ரீதியாகப் பயன்படுத்த சிற்றளவு வணிகத்தில் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுதல்

(7)

i. சந்தையிலுள்ள நுகர்வோரில் ஒரு குறிப்பிட்ட குழுவினர் தமது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை சந்தை இடைவெளி எனப்படுகின்றது.

ii. தொழில் வாய்ப்பு அதிகரித்தல்
தேசிய உற்பத்தி அதிகரித்தல்
வுரமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு குறைவடைதல்
உள்நாட்டு அறிவு மற்றும் வளம் பயன்படுத்தப்படல்
கால மாற்றத்திற்கேற்ப பாரியளவு வணிகமாக மாற்றமடைதல்
பாரியளவு வணிகங்களால் வழங்கப்படாத பொருட்கள் மற்றும் சேவைகள் சமூகத்திற்கு கிடைக்கப் பெறல்

iii. வணிகத்தின் நிதிக்கருமங்களில் நிர்வாகம் பலவீனமாக இருத்தல்
போட்டி நிலைமைகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலை
வணிகச் செயற்பாடுகள் திட்டமிடப்படாத முறையில் மேற்கொள்ளப்படல்

வணிகத்தில் காணப்படும் வளங்கள் முறையாக நிர்வாகிக்கப்படாமை
பலவீனமான மானிடத் தொடர்பு
வணிகச் செயற்பாடு தொடர்பில் நடமுறை அனுபவம் போதாமை

iv. தொழில்நுட்பத் திறன்கள்
மானிடத் திறன்கள்
எண்ணக்கரு ரீதியான திறன்கள்
குழுக்களுடன் செயற்படும் திறன்கள்
தொடர்பாடல் திறன்கள்
ஆலோசனைத் திறன்கள்
முன்மாதிரியாக செயற்படும் திறன்கள்


අපොස සා/පෙළ පසුගිය විභාග ප්‍රශ්නෝත්තර පොත් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට


**www.lol.lk**
**Learn Ordinary Level**


LOL.lk online Book Store


LOL.lk Learn Ordinary Level


අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371





































Online shopping

**www.lol.lk**
**Learn Ordinary Level**

DELIVERY ISLANDWIDE
SECURE PAYMENT

# LOL.lk
online Book Store

071 777 4440/0756999990/071 8540371

## පළාත් ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්











## ආදර්ශ ප්‍රශ්න පත්‍ර සහ පිළිතුරු පත්‍ර පොත්














## කෙටි සටහන් පොත්










මිටිටම් සහිතව ගෙදරටම ගෙන්වාගැනීමට

**www.lol.lk**

**Learn Ordinary Level**

අමතන්න - 071 777 4440/0756999990/071 8540371

PAST PAPERS WIKI

# ප්‍රශ්නපත්‍ර පොත්
# ගෙදරටම ගෙන්ව ගන්න
# ඔන්ලයින් ඔඩර් කරන්න
# WWW.LOL.LK
# වෙත යන්න

BUY NOW

Secure Payments By PayPal
NO PAYPAL ACCOUNT NEEDED!

# ONLINE BOOK STORE

An evening of fun for young readers

